**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்</u>**

**முன்னிலை : திருமதி.அ.மலர்விழி, M.L.,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**
**தஞ்சாவூர்.**

2022 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 28 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
(திருவள்ளுவராண்டு 2053 – ஆனித் திங்கள் 14 ஆம் நாள்)

**<u>அசல் வழக்கு எண்.43/2021</u>**
**<u>CNR No: TNTJ010017832021OS/512/2021</u>**

(1) அமிர்தசெல்வி
(2) சாந்தி
(3) சுமதி

**......வாதிகள்**

**/எதிர்/**

(1) P. தங்கமோகன்
(2) செந்தில்குமார்
(3) ஆறுமுகம்
(4) தியாகராஜன்
(5) ரமேஷ்ராகவன்
(6) சிவசங்கர்
(7) ஜோதிடர் ராஜமன்னார்
(8) V. கண்ணன்
(9) T. ராஜா
(10) அறிவழகன்
(11) சங்கர்
(12) S. குருநாதன் **.......பிரதிவாதிகள்**

இவ்வழக்கு, தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் **11.3.2021** அன்று கோப்பில் எடுக்கப்பட்டு, **18.3.2021** அன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வழக்கு **24.6.2022** அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. **S. சத்தியமூர்த்தி** அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. **P. சண்முகநாதன்** அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 6, 8, 9, 10, 11 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் **திரு.N. செல்வராஜ்** அவர்கள் முன்னிலையாகியும், 7, 11 பிரதிவாதிகளுக்காக வாதி படி செலுத்தாத காரணத்தினால் 7, 11 பிரதிவாதிகளைப் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டும், 1 முதல் 6, 8, 9, 10, 12 பிரதிவாதிகள் அழைத்து ஆஜராகாததால் எதிரவரில்லா நிலையாக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதத்தைக் கேட்டும், வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், இவ்வழக்கினை இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

தாவா சொத்தில், வாதிகளுக்கு 3/5 பாகம் பாத்தியம் உள்ளதென விளம்புகை செய்து வாதிகளுக்கு தாவா சொத்தில் 3/5 பங்கை பொறுத்து பாகப்பிரிவினைக்கு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், முதல்நிலை தீர்ப்பாணையை அனுசரித்து தாவா சொத்தில் வாதிகளுக்கு உண்டான 3/5 வீதத்தை நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து நளஇளப்பம் சரிக்கட்டி பாகம் பிரித்து

இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், வாதிகளின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட பாகவீத சொத்தை வாதிகளின் தனித்த சுவாதீனத்தில் விட்டுக்கொடுக்க உத்தரவு பிறப்பிக்கக் கோரியும், பிரதிவாதிகள் மறுத்தால் வாதிகளின் தனித்த சுவாதீனத்தில் விட நீதிமன்றம் மூலம் வாதிகளுக்கு சுவாதீனம் கிடைக்க ஆவணம் செய்து கொடுக்க உத்தரவு பிறப்பிக்கக் கோரியும், 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள கடைகளிலிருந்து பெற்றுக்கொண்ட வாடகைக்காக கடந்தகால வரும்படியாக ரூ.12,69,360/-த்தை வாதிகளுக்கு கொடுக்க உத்தரவிடக்கோரியும், வாதிகளுக்கு 1, 2 பிரதிவாதிகள் எதிர்கால வரும்படியாக மாதம் ஒன்றுக்கு ரூ.37,260/- கொடுக்க உத்தரவிடக்கோரியும், வழக்கின் செலவுத் தொகையை பிரதிவாதிகளிடமிருந்து வாதிகளுக்கு கொடுக்கக் கோரியும் இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :</u>**

(2) தாவா சொத்தானது வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் இந்து கூட்டுக்குடும்ப பிரிபடாத சொத்தாகும். தாவா சொத்தானது வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் பாட்டியான துளசியம்மாள் என்பவர் பெயருக்கு கிரயம் வாங்கப்பட்டு அனுபவம் செய்யப்பட்டு, 28.11.1967 ல் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரான பெரியசாமியை வாரிசாக விட்டு விட்டு இறந்துவிட்டார். வாதிகளின் தகப்பனாரும், 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாருமான பெரியசாமி தாவா சொத்தை வாரிசுரிமைப்படி அடைந்து அனுபவம் செய்து வந்து எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் 17.3.1999 அன்று வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் மனைவி ரெத்தினம்மாள்

ஆகியோரை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். பெரியசாமி இறந்தபின்பு பெரியசாமியின் வாரிசுகளின் சம்மதத்தின் பேரில் பெரியசாமியின் மனைவியான ரெத்தினம்மாள் பெயருக்கு 27.4.2000 ல் பட்டா மாற்றப்பட்டது. பின்னர் ரெத்தினம்மாள் 2010 ல் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளை வாரிசாக விட்டு இறந்துவிட்டார். பெரியசாமி மற்றும் ரெத்தினம்மாளின் வாரிசுகள் என்ற முறையில் தாவா சொத்து வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிடைக்கப் பெற்று கூட்டாக அனுபவம் செய்து வந்தனர். ரெத்தினம்மாள் உயிருடன் இருந்தபோதே வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து தாவா சொத்தின் முன்புறத்தில் கடைகள் கட்டுவதற்காக LIC housing Finance-ல் கடன் பெற்று தாவா சொத்தின் முன்புறத்தில் புதிதாக 12 கடைகள் கட்டப்பட்டு அவைகள் வாடகைக்கு விடப்பட்டன. தாவா சொத்திலிருந்த கடைகள் வாடகைக்கு விடப்பட்டதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு LIC housing Finance ல் வாங்கப்பட்ட கடன் முழுவதும் 6.2.2013-ல் அடைக்கப்பட்டது. தாவா சொத்தில் உள்ள 12 கடைகளில் 3 முதல் 12 பிரதிவாதிகள் வாடகைதாரர்களாக உள்ளனர். தாவா சொத்தில் 1, 2 கடைகளில் 3 ஆம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.30,000/- எனவும், கடை எண்.3, 4 ல், நான்காம் பிரதிவாதி வாடகைதாரரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.9,000/-எனவும், கடை எண் 5 ல், ஐந்தாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3600/- எனவும், கடை எண் 6 ல், ஆறாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.2,000/- எனவும், கடை எண் 7 ல், ஏழாம் பிரதிவாதி வாடகைதாரராகவும்,

மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3,000/- எனவும், கடை எண் 8 ல், எட்டாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3,500/- எனவும், கடை எண் 9 ல், ஒன்பதாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3,000/- எனவும், கடை எண் 10 ல், பத்தாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.2,000/- எனவும், கடை எண் 11-ல் , பதினொன்றாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3,000/- எனவும், கடை எண் 11-ல் , பதினொன்றாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3,000/- எனவும், 1, 2 பிரதிவாதிகள் 1, 2 பிரதிவாதிகள் 6.2.2013 அன்று முதல் பெற்று வருகிறார்கள். வாதிகள் தாவா சொத்தை கூட்டாக அனுபவிக்க விரும்பாததால், வாதிகளுக்கு தாவா சொத்தில் 3/5 பாகமும், தாவா சொத்தில் உள்ள கடைகளிலிருந்து பெறப்படும் வாடகையிலும் 3/5 பங்கை வாதிகளுக்கு கொடுக்குமாறு வாதிகள் கடந்த 11.2.2021 அன்று பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள். தாவா சொத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.62,500/- 3 முதல் 12 பிரதிவாதிகளிடமிருந்து வருகிறது. இதில் வாதிகளுக்கு ரூ.37,260/- பங்கு உள்ளது. இந்த வாடகையை 1, 2 பிரதிவாதிகள் 6.2.2013 முதல் பெற்று வந்தபோதிலும், வாதிகள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் தங்களுடைய வாடகையில் உள்ள 3/5 பங்கிற்காகவும், தாவா சொத்தில் 3/5 பாகத்தை பாகப்பிரிவினை செய்து தரக்கோரியும், கடந்தகால மற்றும் எதிர்கால வருமானம் கோரியும் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

(3) இவ்வழக்கின் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் எதிரவரில்லா நிலையாக்கப்பட்டனர். வாதிகள் தரப்பில் 2 ஆம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

(4) **தீர்விற்குரிய பிரச்சினை**:

இவ்வழக்கு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்விற்குரிய பிரச்சினை.

**தீர்வு**

**(5)** வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வாதிகள் தங்கள் வழக்குரையிலும், வா.சா.1 ன் சாட்சியத்திலும், தாவா சொத்தானது வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் இந்து கூட்டுக்குடும்ப பிரிபடாத சொத்து என்றும், வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் பாட்டியான துளசியம்மாள் என்பவர் பெயருக்கு கிரயம் வாங்கப்பட்டு அனுபவம் செய்யப்பட்டு, 28.11.1967 ல் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரான பெரியசாமியை வாரிசாக விட்டு விட்டு இறந்த பிறகு, வாதிகளின் தகப்பனாரும், 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாருமான பெரியசாமி தாவா சொத்தை வாரிசுரிமைப்படி அடைந்து அனுபவம் செய்து வந்த நிலையில், 17.3.1999 அன்று எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் மனைவி ரெத்தினம்மாள் ஆகியோரை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், பெரியசாமி இறந்தபின்பு பெரியசாமியின் வாரிசுகளின் சம்மதத்தின் பேரில் பெரியசாமியின் மனைவியான ரெத்தினம்மாள் பெயருக்கு

27.4.2000 ல் பட்டா மாற்றப்பட்டது என்றும், பின்னர் ரெத்தினம்மாள் 2010 ல் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளை வாரிசாக விட்டு இறந்துவிட்டார் என்றும், பெரியசாமி மற்றும் ரெத்தினம்மாளின் வாரிசுகள் என்ற முறையில் தாவா சொத்து வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு கிடைக்கப் பெற்று கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்றும், ரெத்தினம்மாள் உயிருடன் இருந்தபோதே வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து தாவா சொத்தின் முன்புறத்தில் கடைகள் கட்டுவதற்காக LIC housing Finance-ல் கடன் பெற்று தாவா சொத்தின் முன்புறத்தில் புதிதாக 12 கடைகள் கட்டப்பட்டு அவைகள் வாடகைக்கு விடப்பட்டதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு LIC housing Finance ல் வாங்கப்பட்ட கடன் முழுவதும் 6.2.2013-ல் அடைக்கப்பட்டது என்றும், தாவா சொத்தில் உள்ள 12 கடைகளில் 3 முதல் 12 பிரதிவாதிகள் வாடகைதாரர்களாக உள்ளனர் என்றும், தாவா சொத்தில் 1, 2 கடைகளில் 3 ஆம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.30,000/- எனவும், கடை எண்.3, 4 ல், நான்காம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.9,000/-எனவும், கடை எண் 5 ல், ஐந்தாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3600/- எனவும், கடை எண் 6 ல், ஆறாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.2,000/- எனவும், கடை எண் 7 ல், ஏழாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3,000/- எனவும், கடை எண் 8 ல், எட்டாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3,500/- எனவும், கடை எண் 9 ல், ஒன்பதாம் பிரதிவாதி

வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3,000/- எனவும், கடை எண் 10 ல், பத்தாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.2,000/- எனவும், கடை எண் 11-ல் , பதினொன்றாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3,000/- எனவும், கடை எண் 11-ல் பதினொன்றாம் பிரதிவாதி வாடகைதாரராகவும், மாதம் ஒன்றுக்கு கடைக்கு வாடகை ரூ.3,000/- எனவும், 1, 2 பிரதிவாதிகள் 6.2.2013 அன்று முதல் பெற்று வருகிறார்கள். வாதிகள் தாவா சொத்தை கூட்டாக அனுபவிக்க விரும்பாததால், வாதிகளுக்கு தாவா சொத்தில் 3/5 பாகமும், தாவா சொத்தில் உள்ள கடைகளிலிருந்து பெறப்படும் வாடகையிலும் 3/5 பங்கை வாதிகளுக்கு கொடுக்குமாறு ஒரு முதல்நிலை தீர்ப்பாணையும் பிறப்பிக்கக் கோரியுள்ளதாகச் சொல்லியுள்ளார்.

(6) அறிவிப்பு சார்வாகியும் பிரதிவாதிகள் நீதிமன்றம் முன்னிலையாகாததால் எதிரவரில்லா நிலையாக்கப்பட்டனர். வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதிகள் தரப்பில் தங்கள் வழக்கை உறுதி செய்ய 18.1.1994 தேதியிட்ட துளசியம்மாள் பெயரிலுள்ள கிரய பத்திரத்தின் நகல் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 24.7.2000 தேதியிட்ட தஞ்சாவூர், மண்டல துணை வட்டாட்சியரின் பட்டா மாறுதல் உத்தரவு உண்மை நகல் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 28.7.2010 தேதியிட்ட ரெத்தினம்மாளின் இறப்புச் சான்றிதழ் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 13.4.2022 தேதியிட்ட T.S. பெரியசாமியின் இறப்புச்

சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், வாதிகள் பிரதிவாதிகளுக்கு 11.2.2021 அன்று அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 15.2.2021 தேதியிட்ட அஞ்சலக ரசீதுகள் வா.சா.ஆ.6 ஆகவும், அஞ்சலக ஒப்புதல் அட்டை (10 எண்ணிக்கை) வா.சா.ஆ.7 ஆகவும், 3.3.2021 தேதியிட்ட வாதிகள் தரப்பு வழக்கறிஞருக்கு பிரதிவாதிகள் வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.8 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியின் வழக்கை மறுத்து கட்சி செய்யாமல் பிரதிவாதிகள் எதிரவிரல்லாநிலையாகி உள்ளனர். எனவே வாதிகளின் வழக்கும் வா.சா.1 ன் சாட்சியமும் நம்பத்தகுந்ததாக உள்ளன.

(7) வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தின் நகலிலிருந்து தாவா சொத்தானது வாதிகளின் தாய்வழிப்பாட்டி துளசியம்மாளுக்கு சொந்தமானது என அறியமுடிகிறது. துளசியம்மாளின் வாரிசு சான்றின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்படவில்லை என்றபோதிலும், வழக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜெராக்ஸ் நகலில் வாதிகளின் தந்தை பெரியசாமி மட்டுமே வாரிசு என கண்டுள்ளது. பெரியசாமி மற்றும் ரெத்தினம்மாளின் இறப்புச் சான்றிதழ் வா.சா.ஆ.4 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரெத்தினம்மாள் என்பவரது வாரிசு சான்றிதழின் உண்மை நகல் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி வாதிகளும் 1, 2 பிரதிவாதிகளும் ரெத்தினம்மாளின் வாரிசுகள் என அறியமுடிகிறது. வாதிகள் வழக்குரையுடன் பெரியசாமியின் வாரிசு சான்று நகல் தாக்கல் செய்துள்ளார்கள். அது ஜெராக்ஸ் நகல் என்பதால் குறியீடு செய்யப்படவில்லை.

(8) வாதிகள் தரப்பு ஆவணங்களிலிலிருந்து 1 முதல் 3 வாதிகள் மற்றும் 1, 2

பிரதிவாதிகளும் வாரிசுகள் என தெளிவாக அறியமுடிகிறது. பெரியசாமி துளசியம்மாளின் ஒரே வாரிசு என்ற முறையில் தாவா சொத்தை அடைந்தவர். அந்த சொத்தைப் பொறுத்து ஈட்டுறுதி ஆவணம் எதுவும் எழுதி வைத்தார் என்பதைக் காட்டவோ, வாதிகளுக்கு தாவா சொத்தில் பாக உரிமை இல்லையென்பதைக் காட்டவோ பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றம் முன்னிலையாகி வழக்கில் எதிர்வாதம் செய்யவில்லை.

(9) எனவே, வாதிகளுக்கு வழக்குரையில் கோரியுள்ளபடி தாவா சொத்துக்களில் 3/5 பாகம் கிடைக்கக்கூடியது என முதல்நிலைத்தீர்ப்பாணை கிடைக்கக்கூடியது எனவும், வழக்குரையில் கோரியுள்ள கடந்தகால மற்றும் எதிர்கால வரும்படி குறித்து உ.வ.வி.மு.சட்டம் கட்டளை 20 விதி 12ன்படி தனியாக மனுதாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் இப்பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

(10) முடிவாக, எதிரவரில்லா நிலையில் வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் 3/5 பாகம் கிடைக்கக்கூடியது என முதல்நிலை தீர்ப்பாணை தாவா செலவுத்தொகையுடன் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. வாதி வழக்குரையில் கோரியுள்ள கடந்தகால மற்றும் எதிர்கால வரும்படி குறித்து உ.வ.வி.மு.சட்டம் கட்டளை 20 விதி 12ன்படி தனியாக மனுதாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, **2022 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 28 ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

Digitally signed by
A MALARVIZHI

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும்**
**அமர்வு நீதிபதி, தஞ்சாவூர்.**

**வாதிகள் தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 - சாந்தி (2ஆம் வாதி)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 18.1.1944 | துளசியம்மாள் என்பவருக்கு நாராயணசாமி ஊர்தியார் என்பவர் எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் |
| வா.சா.ஆ.2 | 24.7.2000 | தஞ்சாவூர் மண்டல துணை வட்டாட்சியர் பிறப்பித்த பட்டா மாறுதல் உத்தரவு உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 28.7.2010 | ரெத்தினம்மாள் என்பவரின் இறப்புச் சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.4 | 13.4.2022 | T.S. பெரியசாமி என்பவரின் இறப்புச் சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.5 | 11.2.2021 | வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | 15.2.2021 | அஞ்சலக ரசீதுகள் (11 எண்ணிக்கைகள்) |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.7 | ............... | அஞ்சலக ஒப்புதல் அட்டை (10 எண்ணிக்கை) |
| வா.சா.ஆ.8 | 3.3.2021 | வாதிகளின் வழக்கறிஞருக்கு பிரதிவாதிகளின் வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பின் அசல் |

Digitally signed by
A MALARVIZHI

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு**

**நீதிபதி, தஞ்சாவூர்**

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அசல் வழக்கு எண்.43/2021</u>**

**<u>நாள். 28.6.2022</u>**